**O.S.No. 83/2022**

**Date 09.07.2025**

**வா.சா–1 வேல்முருகன்**

**9 முதல் 12 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா வழக்கில் மூன்று அயிட்ட சொத்துக்களை வழக்கு சொத்துக்களாக காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். தாவா 1ம் அயிட்ட சொத்து எனதுதகப்பனார் வைரமுத்து தேவருக்கு 25.08.1986 தேதிய பதிவு கிரையம் வா.சா.ஆ.2 மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா 2ம் அயிட்ட சொத்து எனது தகப்பனார் வைரமுத்து தேவருக்கு பதிவு கிரையம் வா.சா.ஆ.1 மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா 3ம் அயிட்ட சொத்து எனது தாயாருக்கு பதிவு கிரையம் வா.சா.ஆ 3 மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்தில் இருந்து வந்த வரும்படியை கொண்டு வாங்கியதாக பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் வைரமுத்து தேவருக்கு எந்தெந்த பூர்வீக சொத்துக்கள் பாத்தியப்பட்டது என பிராதில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 கிரைய பத்திரம் சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனது தாத்தா சங்கரபாண்டிய தேவருக்கு பாத்தியப்பட்டது சொத்து ஆகும். மேற்படி சொத்து சங்கரபாண்டிய தேவருக்கு பாத்தியப்பட்டதற்கு என்பதை காட்டுவதற்கு எழுத்து பூர்வமான ஆதரவு எதுவும் என் வசம் இல்லை. மேற்படி சொத்து சங்கரபாண்டிய தேவருக்கு பாத்தியப்பட்டதற்கு என்பதை காட்டுவதற்கு வருவாய் துறை ஆவணங்கள் உண்டு ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சங்கரபாண்டிய தேவர் மேற்படி சொத்துக்களை அனுபவம் செய்து வந்ததற்கு தீர்வை ரசீதுகள் எனது கைவசம் இல்லை. வா.சா–ஆ.4 ல் கண்ட சொத்து சங்கரபாண்டிய தேவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று தெரியாது என்றால் எனது தாத்தா கிரையம் வாங்கியது ஆகும். அதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். வா.சா–ஆ.4 ல் உள்ள சொத்தை மட்டும் எனது தாத்தா கிரையம் பெற்றாரா அல்லது கூடுதல் விஸ்தீரணம் உள்ள சொத்தை கிரையம் பெற்றாரா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 ன் எதிர்வழக்குரை என்னுடைய தகவலின் பேரில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.11 ல் எதிர்வழக்குரையில் பூர்வீக சொத்துக்களை விற்று அதில் இருந்து வந்த தொகையை கொண்டு இந்த வழக்கின் 1,2 அயிட்ட சொத்துக்களை எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4, 5 கிரைய ஆவணங்களுக்கு முன்பாக இவ்வழக்கின் 1, 2 அயிட்ட சொத்துக்கள் எனது தகப்பனாரால் கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் 2 ம் அயிட்ட சொத்து 1981 ல் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4,5 க்கு மூலமாக கிரையம் கொடுத்தது மூலம் வழக்கின் 1, 2 அயிட்ட சொத்துக்களை கிரையம் பெற்றதாக வா.சாஆ.11 ல் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். எனது தகப்பனார் தோப்புகளை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். அதன் மூலமாக அவருக்கு தனிப்பட்ட வரும்படி உண்டா என்றால் ஆதிகாலத்தில் உண்டு. மேற்படி ஆதிகாலம் என்பது என்ன என்றால் 1970 க்கு முன்னால் எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட வருமானம் உண்டு. எனது தகப்பனார் வைரமுத்து தேவர் உடன்பிறந்த சகோதரர்கள் வீரையா தேவர், ராமர்தேவர், சுப்பிரமணிய தேவர் ஆகியோர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் எதிர்வழக்குரையில் சங்கரபாண்டிய தேவர் அவருடைய மக்கள் நால்வருக்கும் பிரித்து கொடுத்ததாக சொல்லப்படும் சொத்துக்களில் எனது தகப்பனாருக்கு கிடைத்த சொத்து தான் வா.சா–ஆ.4 ல் கண்ட சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ–4 ல் 74 செண்ட்டும் அதற்கான கிணறு பாத்தியம் பற்றி கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா–ஆ.4 ல் கண்ட சொத்து எனது தகப்பனார் வைரமுத்து தேவருக்கு அவரது தகப்பனார் சங்கரபாண்டிய தேவர் அவரது சுய சொத்தில் இருந்து கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் கண்ட சொத்து எனது தகப்பனார் வைரமுத்து தேவருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் சங்கரபாண்டிய தேவராலும், அவருடைய நான்கு மக்களாலும் கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தின் மூலமாக பெறப்பட்ட பணத்தை சங்கரபாண்டிய தேவரின் போஜன செலவிற்காகவும் அவர் ஆண் மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி அபிவிருத்தி செலவிற்காகவும் பெறப்பட்டது என்ற விவரம்சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 4 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சகோதரர் சுப்பிரமணியன் 9 ம் வகுப்பு படித்துள்ளார்.

மற்றொரு சகோதரர் குருவு படிக்கவில்லை. எனது தகப்பனாரின் உடன்பிறந்தவர்களின் மக்கள் யாரும் படிக்கவில்லை. வா.சா.ஆ.4,5 கிரைய காலத்தில் சங்கரபாண்டிய தேவரும், அவரது மக்களும் அவர்களுக்காக தான் கிரையம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய தொகைகளை சங்கரபாண்டிய தேவரே கிரைய பணத்தை பெற்று செலவழித்துகொண்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கண்ட சொத்து சங்கரபாண்டிய தேவருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். வா.சாஆ.5 ல்கண்ட சொத்தை சங்கரபாண்டிய தேவர் உயிருடன் உள்ளபோது எழுத்து மூலமாக பாத்தியம் செய்து கொடுத்திருந்தார்கள் ஆனால் அந்த பத்திரம் என் கைவசம் இல்லை. வா.சா.ஆ–5 கிரைய ஆவணத்தில் தனது மக்களுக்கு பாத்தியம் செய்து கொடுத்தாக சரத்துக்கள் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் கண்ட சொத்தை சங்கரபாண்டிய தேவர் எனது தகப்பனார் வைரமுத்து தேவருக்கு எப்போது பிரித்து கொடுத்தார் என்பதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எப்போது பிரித்துகொடுத்தார் என்ற விவரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் 1980 ல் பிரித்துகொடுத்தார். வா.சா.ஆ.4 ல் 17.08.1983 தேதிய கைத்தடி பாகம் மூலம் பிரிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்கரபாண்டிய தேவர் 1980 ல் எனது தகப்பனாருக்கு பிரித்து கொடுத்தாக கூறுவது தவறு என்றால் சரிதான். சங்கரபாண்டிய தேவர் மேற்படி கைத்தடி பாகம் கொடுக்கும் வரையில் அவர் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். வழக்கில் கண்ட 2 ம் அயிட்ட சொத்து வா.சா.ஆ–4 ல் உள்ள வரும்படியை வைத்து வாங்கியதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வைரமுத்து தேவர் 23.03.2002ல் காலமானர் என்றால் சரிதான். அதற்காக தான் வா.சா.ஆ.6 இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகள் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல்செய்திருந்ததாக சொல்லப்படும் மு.வ எண். 76/2001 என்ற வழக்கில் என்னை 3 ம் பிரதிவாதியாக கட்சி செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மு.வ எண். 76/2001 வழக்கு காலத்திலேயே எனது தகப்பனார் வைரமுத்து தேவர் வழக்கின் 1, 2 அயிட்ட சொத்துக்களை 06.04.2000 ல் செட்டில்மெண்ட் மூலம் பாத்தியம் செய்து கொடுத்துள்ளதாகவும், 3 ம் அயிட்ட சொத்தை எனது தாயார் ராமுஅம்மாள் 24.01.2000 தேதியில்கிரையம் செய்து

கொடுத்தாகவும் கூறி வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 76/2001 வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்திலேயே 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் மூலமாகவும், கிரைய மூலமாகவும் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ள விவரம் மேற்படி வழக்கின் அடிப்படையில் தெரியும் என்றால் சரிதான். மேற்படி 76/2001ல் வழக்கி நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி கட்சி செய்யவில்லை என்றால் நியாபகம் இல்லை. 76/2001 வழக்கில் எனது சகோதரர்கள் சுப்பிரமணியன், குருவு கட்சி செய்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் வழக்கு சொத்துக்கள் தவிர்த்து வேறு சொத்துக்கள் கிரையம் மூலமாக பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். வேறு கிரையங்கள் மூலம் பெற்ற சொத்துக்களில் பவுண்டு தொழு தெருவில் உள்ள கதவிலக்கம் 23 மற்றும் 24 வீடுகள் சேர்ந்த மனை நிலங்கள் என்றால்சரிதான். அவை நத்தம் சர்வே எண் 607/10ல் ஏக்கர் 2 செண்ட் 2ல் மேற்கடைய செண்டு 27 ஆகும். அது தவிர சிவகிரி கிராமத்தில் சின்ன ஆவுடைபேரி கண்மாய் புரவில் சர்வே எண். 51/1, 51/3 ஆகியவற்றில் 1 ஏக்கர் 72 செண்ட் புஞ்சை இடம் உண்டு என்றால் சரிதான். மேற்படி கதவிலக்கம் 23ம் வீட்டில் குடியிருந்து வருதாக தான் நான் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி 27 செண்டு வீட்டு மனையில் 23ம் வீடு உட்பட கீழ்பாதி இடத்தையும், மேற்படி புஞ்சை 1 ஏக்கர் 72 செண்டில் கீழ்பாதி 86 செண்ட் இடத்தை எனது மனைவி சண்முகலட்சுமிக்கு எனது தகப்பனார் 06.03.2002ல் பதிவு உயில் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதுபோக மீதமுள்ள சொத்துக்களை எனது தகப்பனார் 05.03.2002 தேதியிட்ட பதிவு உயில் ஆவணம் மூலம் இவ்வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயிலில் கண்ட சொத்துக்களை எனது சகோதரர் சுப்பிரமணியன், குருவும் கொடுக்கவில்லை என எனது மனைவி மு.வ எண். 147/2003 வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் வழக்கு நடந்தது. 2 முதல் 4 பிரதிவாதிகள் எனது சகோதரர் சுப்பிரமணியன், குருவும் கொடுக்கவில்லை என 104/2003 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 23ம் நம்பர் வீட்டினையும் 1 ஏக்கர் 72 செண்டினையும் கீழ்பாதி 86 செண்ட நிலத்தையும் என் மனைவி நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் எடுத்தார் என்றால் வீட்டை எடுக்கவில்லை, நிலத்தை எடுத்தார்.

மேற்படி இருவழக்கிலும் எனது சகோதரர்கள் பூர்வீக இடத்தில் இருந்து வந்த வரும்படியை கொண்டு வாங்கிய சொத்து என கூறி கட்சி செய்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. மு.வ எண். 147/2003 வழக்கை எனது மனைவிக்காக நான் தான் வழக்கை நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி இருவழக்கில் கண்ட சொத்துக்கள் வைரமுத்து தேவருக்கு சுயார்ஜித சொத்துக்கள் என முடிவு செய்யப்பட்டு, அதன் வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரிதான். மேற்படி வழக்குகளில் எனக்கு பங்குரிமை உள்ளதாக கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். 76/2001 வழக்கில் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் நியாபகம் இல்லை. மேற்படி 76/2001 வழக்கில் கண்ட சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருப்பதாக உறுதி செய்யப்பட்டு, தற்காலிக உறுத்துகட்டளை மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகு மேற்படி வழக்கின் சொத்துக்களை சுவாதீன பரிகாரம் கோரி சீர்திருத்த மனு தாக்க்ல செய்திருந்தார்கள் என்றால் செய்திருக்கலாம். எனக்கு தெரியாது. மேற்படி சீர்திருத்தமனுவிற்கு நான் தாவா செய்தேனா என்றால் ஆட்சேபனை செய்தேன். மேற்படி சீர்திருத்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சீர்திருத்த மனு அனுமதிக்கப்பட்டதற்கு மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. மேற்படி சீர்திருத்த மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் தாவா மதிப்பு அதிகப்படியானதால் உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டு திருப்பி அனுப்பபட்டது என்றால் சரிதான். அதன்பிறகு 2 முதல் 4 பிரதிவாதிகள் வாதிகளாக இருந்து சிவகிரி நீதிமன்றத்தில் மு.வ எண். 79/2009 என வழக்கை தாக்கல் செய்தாகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 8, 13 முதல் 17 ஆவணங்கள் 76/2001 வழக்கில் மனு விசாரணையின் போதுஅதன் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து சான்றிட்ட நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களின் அசல் என் கைவசம் இல்லை. எனது தாயார் தற்போது உயிருடன் உள்ளார். எனது தாயார் தான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது சகோதரர் சுப்பிரமணியன் இறந்துவிட்டார். மேற்படி சுப்பிரமணியனின் வாரிசுகள் தான் 6 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

வழக்கு சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார் வா.சா.ஆ.7 ன் மூலமாக 2 முதல் 4 வாதிகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிகொடுத்த விவரமும், 3 ம் அயிட்ட சொத்தை பொறுத்து எனது தாயார் வா.சா.ஆ.8 ன் மூலமாக 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கிரையம்கொடுத்த விவரங்கள் 76/2001 வழக்கு மூலமாக தெரிந்திருந்தும், வைரமுத்து தேவருக்கு பாத்தியப்பட்ட வேறு கிரைய சொத்துக்களை எனது மனைவிக்கும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 2002 ல் பதிவு உயில் ஆவணங்கள் மூலம் பாத்தியம் செய்து கொடுக்கப்பட்ட விவரம் தெரிந்திருந்தும், எனது தகப்பனார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை யாதொரு ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டதாக பிராதில் கூறியிருப்பது தவறு என்றால் சரிதான். எனது தகப்பனார் எழுதி கொடுத்த வா.சா–ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணம், வா.சா.ஆ.8 கிரைய பத்திரத்தை ரத்து செய்ய நானோ எனது சகோதரரின் வாரிசுகளோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா 1,2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலும், எனது தாயார் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 3 ம் அயிட்ட சொத்தை பொறுத்து எழுதி கொடுத்த கிரையத்தின் அடிப்படையில் கண்ட சொத்துக்களுக்கு 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவண காலங்களில்இருந்து கிரையம்கொடுக்கும் வரையில் 2 முதல் 4 பிரதிவாதிகள் அரசாங்க வரி உள்ளிட்டவை கட்டி வந்தனர் என்றால் அது குறித்து தெரியாது. அனுபவம் என்னிடம் இருக்கிறது. தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறி தான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–11 எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு கூறவில்லை. வா.சா.ஆ.11 ல் வழககின் சொத்துக்கள் முழுவதும் எனது அனுபவத்தில் இருப்பதாக குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–11 ல் எனது அனுபவத்தில் உள்ளதாக கூறிவிட்டு இவ்வழக்கில் பொது அனுபவத்தில் இருப்பதாக கூறி ஒன்றுக்கொன்று முரண்பட்டு கட்சி செய்வதால் எனது பிராது சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ட சொத்துக்களுக்கு நான் தீர்வை செலுத்தியதாக ஆவணங்கள்இல்லை என்றால் சரிதான்.

நான் தாவாசொத்துக்களுக்கு தீர்வை செலுத்தவில்லை. 71/2009 சிவகிரி நீதிமன்ற வழக்கில் எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். மேற்படி அழைப்பானையின் பேரில் நான் ஆஜராகவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 2019 வரை அந்த வழக்கில் நான் ஆஜராகவும் இல்லை எதிர்வழககுரை தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் சர்வே எண் 607/10 ல் உள்ள கதவிலக்கம் 23, 24 வீடுகள் மற்றும் அது சேர்ந்த 27 செண்ட் இடத்தை பொறுத்து பிரிவினை செய்யப்படாத சொத்து என்று கூறி இவ்வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகள் இந்த நீதிமன்றத்தில் மு.வ எண். 119/2015 என்ற வழக்கை எனது மனைவி மீது தாக்கல்செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு காரணமாக எனக்கும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பகை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 119/2015 வழக்கு சொத்துக்களின் ஒரு பாதியை சென்னையில் உள்ள கணேசன் என்பவருக்கு விற்க முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. பிரிவினை செய்யப்படாத சொத்தை எனது மனைவி விற்க முயற்சி செய்த காரணத்தினால் தான் மு.வ எண். 119/2015 வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. மு.வஎண். 119/2015 வழக்கில் ஏற்பட்ட பகையை தீர்த்துகொள்ள வேண்டி இவ்வழக்கின் பிராது சொத்துக்களில் எனக்கும் உரிமை இருப்பதாக பொய்யான விவரம் கூறி பின் இணைவாக 2019 ல் வா.சா–ஆ.11 எதிர்வழக்குரையை நான் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 71/2009 வழக்கில் நான் ஆஜராகாத காரணத்தினால் நான் தோன்றா தரப்பினராக தான் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் தோன்றா தரப்பினராக இருந்ததைரத்து செய்ய வேண்டி மனு எண். 1/2019 செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவினை 71/2009 வழக்கு முடியும் வரைஅனுமதிக்க வில்லை என்றால் அனுமதித்தார்கள். மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி மனு அனுமதிக்கப்படாமலேயே மேற்படி வழக்கு வாதியின் தவறுகைக்காக தள்ளுபடிசெய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 71/2009 வழக்கின் வாதிகளான 2 முதல் 4 பிரதிவாதிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 71/2009 வழக்கில் எனது சகோதரர் சுப்பிரமணியன், குருவு மற்றும் என்னை 1 முதல் 3 பிரதிவாதிகளாக கட்சி செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் உள்ள போது மேற்படி சுப்பிரமணியன்

இறந்துபோனார் என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியனுக்கு அவரது வாரிசுகளின் அடிப்படையில் எனது தாயாரை 4ம் பிரதிவாதியாக மேற்படி வழக்கில் கட்சி சேர்த்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தாயாரோ, மேற்படி சுப்பிரமணியின் இதர வாரிசுகளோ தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்துக்கள் அவர்களது அனுபவத்தில் இருப்பதாக கட்சி செய்தார்கள் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி வழக்கின் எதிர்வழக்குரையினை நான் படித்து பார்க்கவில்லை. 71/2009 வழக்கில் எனது சகோதரர்கள் தாக்கல் செய்த எதிர்வழககுரையை இவ்வழக்கின் வா.சா–ஆ.12 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 அறிவிப்பு எனது சகோதரர்கள் சுப்பிரமணியன், குருவு ஆகியோர்கள் அவர்களது வழக்கறிஞர் மூலமாக இவ்வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பட்ட பதில் அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.15 பதில் அறிவிப்பு எனது சகோதரிகள் O.S.No. 76/2001 வழக்கிற்கு முன்பாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு அனுப்பபட்ட பதில் அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி 76/2001 வழக்கிற்கு முன்னர் எனது சகோதரிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கும் அனுப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன். அதற்கு நான் பதில் அனுப்பவில்லை. வழக்கின் 1, 2 அயிட்ட சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கின் 10, 11 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் 9ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார்கள் என்று பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் 9ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பவர் குறித்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.19 ஆவணம் 2 முதல் 4 பிரதிவாதிகள் 10, 11 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த கிரையத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ.19 கிரைய ஆவணத்தை வழக்கறிஞர் படித்து காண்பித்துள்ளார். வா.சா–ஆ.19 கிரைய ஆவணத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகள் 9ம் பிரதிவாதிக்கு பவர் எழுதிக்கொடுத்தாக சரத்துக்கள் துலங்காது என்றால் எனக்கு ஆவணத்தை படிக்க தெரியவில்லை. 2 முதல் 4 பிரதிவாதிகள் 9ம் பிரதிவாதிக்கு பவர் எழுதிக்கொடுத்தாக வா.சா–ஆ.19 கிரைய ஆவணத்தில் உள்ளதாக வழக்கறிஞர் கூறினாரா என்றால்

நியாபகம் இல்லை. வா.சா.ஆ–19 ஆவணத்தில் எழுதி வாங்கும் நபர்கள் தான் 9ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம்பெற பவர் எழுதிக்கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு நியாபகம் இல்லை. 3ம் அயிட்ட சொத்து 2 முதல் 4 பிரதிவாதிகள் சேர்த்து வா.சா.ஆ.20 படி 12 பிரதிவாதிக்கு கிரையம்கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி இரண்டு கிரைய ஆவணங்களின் அடிப்படையில் 10, 11 பிரதிவாதிகள் பெயரிலும், 12ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம்படியும், கிரையப்படியும், 10, 11, 12 பிரதிவாதிகளுக்கு பட்டா மாற்றம் செய்ததற்கு ரத்து செய்ததற்கு எழுத்து மூலமாக மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் 1, 2 அயிட்ட சொத்துக்களை வா.சா.ஆ.19ன் படி 10, 11 பிரதிவாதிகளும், 3ம் அயிட்ட சொத்தை வா.சா.ஆ.20ன் படி 12ம் பிரதிவாதியும் அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் இவ்வழககு சொத்துக்களை நானோ, 1 மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகள் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. 10 முதல் 12 பிரதிவாதிகள் பெற்ற கிரையம் வா.சாஆ.19, 20 கிரைய ஆவணங்கள் பதிவு முறை சட்டத்தின் படி பெறப்பட்ட முறையான ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19, 20 ஆவணங்களை சரியான உரிமையாளர்களிடம் இருந்து 10 முதல் 12 பிரதிவாதிகள் பெற்ற காரணத்தினால் அதை ஆட்சேபிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பிராது சொத்துக்கள் பிராதில் குறிப்பிட்டுள்ள எனது தகப்பனாரின் பூர்வீக சொத்தில் இருந்து பெறப்பட்ட வரும்படியில் இருந்தோ அல்லது அவற்றை விற்ற தொகையில் இருந்தோ பெறப்பட்ட சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றாலும், எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. பிராது சொத்துக்களில் பிராதில் குறிப்பிட்டுள்ளவாறு எனக்கும் மற்ற நபர்களுக்கும் எந்த வித பங்குரிமை கிடையாது என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் எனது மனைவி மீது போடப்பட்ட வழக்கான 119/2015 வழக்கின் காரணமாக 2 முதல் 4 பிரதிவாதிகள் மீது நாங்கள் கொண்ட பகையை வஞ்சம் தீர்த்துகொள்ளவதற்காக எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் அவர்களை கஷ்டநஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கை தேவையற்ற நிலையில் தாக்க்ல செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. வழக்கு 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு வீண் செலவுகளும் மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு நான் தான் பொறுப்புதாரி என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் 1 , 5 முதல் 9 பிரதிவாதிகள் இவ்வழக்கில் அவசியதரப்பினர்கள் கிடையாது என்றால் சரியல்ல. 71/2009 வழக்கில் எனது சகோதரர்கள் சுப்பிரமணியன் இறந்த பிறகு அவரது வாரிசுகள் 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் வழக்கு சொத்தை அவர்களாக ஒப்படைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. 71/2009 ல் கண்ட சொத்துக்கள் அதில்கண்ட தரப்பினர்களால் 2 முதல் 4 பிரதிவாதிகளின் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால் மேற்படி வழக்கினை மேல்நடத்தவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு முன்னர் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் எதிர்வழக்குரைவிவரங்களை கூறியுள்ளனர் என்றால் சரிதான். அதன்பிறகும் பிரதிவாதிகளை கஷ்டநஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19, 20 ஆவணத்தில் உள்ள சாட்சி வை.குருவு என்பவர் எனது சகோதரர், மற்றொரு சாட்சி 6 ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் தான் பத்திர பதிவின் போது எழுதி கொடுத்தவர்கள் இன்னார் என்று அடையாளம் காட்டி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது சகோதரர் குருவு, இறந்துபோன சுப்பிரமணியன் என்பவருக்கும் பிராது சொத்தில் உரிமை இல்லாத காரணத்தினால் தான் மேற்படி ஆவணத்தில்கையொப்பம்செய்துள்ளனர் என்றால் பணத்தை பெற்றுக்கொண்டு கையொப்பம் செய்திருக்கலாம். 2 முதல் 4 பிரதிவாதிகள் பிராது சொத்துக்களை பொறுத்து பெற்றுள்ள தான செட்டில்மெண்ட் மற்றும் கிரைய ஆவணத்தை பொறுத்து இந்த வழக்கு காலம் வரை பிராது சொத்துக்களில் எனக்கு பங்கு உள்ளதாக கூறி பாகம் கேட்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். பிராது சொத்துக்களில் நான் கோரும் பாக உரிமையும் காலாவதி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. பிராது பிரதிவாதிகளின் செலவு மற்றும் நிறையீட்டு செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில்  மறு விசாரணை**

2 முதல் 4 பிரதிவாதிகள் மு.வ எண. 119/2015 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

**9 முதல் 12 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை**

மேற்படி வழக்கு 119/2015 வழக்கிற்கு தென்காசி மாவட்ட நீதிமன்றத்தில் AS No.5/2025 என  மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது மனைவி வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளார் என்றால் சரிதான்.

**1 முதல் 8 பிரதிவாதிகள் மேற்படி 9 முதல் 12 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.**